**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION MAY 2024**
(Sixth Semester)

Branch – **TAMIL**

**OPPILAKKIYAM**

Time: Three Hours | Maximum: 50 Marks

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (5 x 1 = 5)**

1 வெஞ்சினக் காப்பியம் என அழைக்கப்படும் இயல்புடையது எது?
(அ) சிலப்பதிகாரம் (ஆ) இலியாது
(இ) மணிமேகலை (ஈ) ஒடிசி

2 தொனிக்கோட்பாட்டை வரையறை செய்தவர் யார்?
(அ) மகிமபட்டர் (ஆ) அபிநவகுப்தர்
(இ) ஆனந்தவர்த்தனர் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3 புறநானூற்றில் கையறுநிலைத் துறையைச் சார்ந்த பாடல்கள் எத்தனை உள்ளன?
(அ) 38 (ஆ) 40
(இ) 41 (ஈ) 42

4 சங்கப்பாக்களை வாய்மொழி இலக்கியங்களே என அறுதியிட்டுக் கூறியவர்
(அ) டாக்டர் வித்தியானந்தன் (ஆ) டாக்டர் ஜே.ஆர்.மார்
(இ) டாக்டர் க. கைலாசபதி (ஈ) என். கே. சித்தாந்தா

5 தவறான இணை எது?
(அ) குறிஞ்சி - வாகை (ஆ) முல்லை - வஞ்சி
(இ) மருதம் - உழிஞை (ஈ) நெய்தல் - தும்பை

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5 x 3 = 15)**

6 அ. ஒப்பிலக்கியம் பயன்பாடுகளை எடுத்துரைக்க.
(அல்லது)
ஆ. இயற்கைப் பாடல்களும் கவிஞர்களும் பற்றிய ஒப்பீட்டுக் கருத்துக்களைப் புலப்படுத்துக.

7 அ. வனப்பின் இயல்பும் வகைகளும் பற்றி எடுத்துரைக்க.
(அல்லது)
ஆ. ஒப்பீட்டு முறையில் தமிழிலும் பிறமொழியிலும் காணப்படும் போற்றிப்பாடல்களின் இயல்பினைப் புலப்படுத்துக.

8 அ. கல்லறைப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள் - ஒப்பிடுக.
(அல்லது)
ஆ. காதற்பாடல்கள் குறித்த ஒப்பீட்டுக் கருத்துக்களை புலப்படுத்துக.

**Cont...**

9 அ. இரவலருக்கும் புரவலருக்குமான உறவுநிலை குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. மன்னர் - புலவர் நட்பு உலகப்பொதுமை வாய்ந்ததா? விளக்குக.

10 அ. வரிவடிவ இலக்கியத்தைக் கொண்டு வாய்மொழி யாப்பின் புனைதிறத்தை ஒப்பிட்டு விளக்குக.

(அல்லது)

ஆ. அகத்திணை, புறத்திணை வாயிலாக அறியலாகும் மரபு, பண்பாடு போன்றன குறித்து விளக்குக.

## பகுதி - இ

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(5 x 6 = 30)**

11 அ. புகழ் மீது காதல் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதை வீரநிலைக் காலம் கொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ. பழந்தமிழரின் வீரநிலையை நடுகற்கள் பறைசாற்றும் விதத்தை ஆய்க.

12 அ. உள்ளுறையும் இறைச்சியும் தமிழ்க்கவிதைகளில் உறைந்துள்ள பாங்கினை விவரிக்க.

(அல்லது)

ஆ. தன்னுணர்ச்சிப்பாடல்களின் இயல்புகளை மதிப்பிடுக.

13 அ. தமிழில் கையறுநிலைப்பாடல்களின் பாடுபொருளை விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ. களவும் காந்தர்வமும் குறித்து ஒப்பிட்டு ஆய்க.

14 அ. சங்கப்பாடல்கள் வாய்மொழிப்பாடல்களா? ஆய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ. சங்க இலக்கியங்களில் காணலாகும் வாய்மொழிப்பண்புகளை வெளிப்படுத்துக.

15 அ. கவிஞர்களின் உள்ளக்கருத்தை அறிய உருக்காட்சி பயன்படும் விதத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. ‘சிறப்பு வாய்ந்த இலக்கியப் பெட்டகம் திருக்குறள்’ என்னும் கூற்றை நிறுவுக.

Z-Z-Z END